திராவிடன்

ஆசிரியர்: என். வி. என்.

21

அண்ணாவுடன் நான்

என். வி. என்.

திராவிட கழகத் தோழர்கள் அனைவருமே கருப்புச் சட்டை அணிவதை அண்ணா விரும்பாத காரணத்தினால், அவர் கருப்புச் சட்டை அணியாமலேயே கழக மேடைகளில்—நடவடிக்கைகளில் கலந்து வந்தார் என்பதையும், கருஞ்சட்டை யார் யார் அணியவேண்டும் என்று ஒழுங்குபடுத்தப்பட்டால், அதன்படி தாம் அணியத் தயாரென்று

தில்லையென்று மேலும் பலவிதமாகப் பேசினர்.

மாநாட்டிற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்றுவந்தன. அதேபோல காங்கிரஸ் வட்டாரத்திலும், இம் மாநாட்டை நடத்த முடியாதபடி செய்ய தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. டலவிதமான பயமுறுத்தல்களும், அதே சமயத்தில் மாநாட்டை நடத்தவேண்டாம்

அறிஞர் அண்ணாவும் கருஞ்சட்டையும்!

அண்ணா அவர்கள் கூறியதுடன் அதற்கான நிபந்தனைகளையும் தெரிவித்தார் என்றும் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன்.

சென்னையில் நடைபெற்ற திராவிட கழக நிர்வாகக் கமிட்டியில் அண்ணா அவர்களின் யோசனை மீது விவாதம்நடந்தது. அண்ணாவின் யோசனை வரவேற்கக்கூடியதுதான் என்று பெரும்பாலோர் கூறினர். என்றாலும் பெரியார் அவர்கள் நான் சொன்னது சொன்னதுதான். கழகத்தைச் சார்ந்த எல்லோருமே கருப்புச் சட்டை உடுக்க வேண்டுமே தவிர, இவர்கள்தான் போட வேண்டும் அவர்கள் போடக் கூடாது என்றெல்லாம் பேசுவது பைத்தியக்காரத்தனம். இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டார்.

பெரியாரின் உத்திரவை வரவேற்றும் அண்ணாவின் யோசனையை அலட்சியப்படுத்தியும் சில தோழர்கள் வீராவேசமாகப் பேசினர்.

இந்நிலையில் கருஞ்சட்டைத் தொடர்படை மாநாட்டைச் சென்னையில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப மெமோரியல் மண்டபத்தில் அம் மாநாட்டை நடத்தவேண்டிய ஏற்பாடுகளையும் மேற்கொண்டோம். அன்று போலீஸ் துறை அமைச்சரான டாக்டர் சுப்பராயன் இந்த மாநாட்டுக்குத் தடை விதிக்கப் போவதாகவும், அது பற்றி ஆலோசித்து வருவதாகவும், காங்கிரஸ் வட்டாரத்திலும், சர்க்கார் தரப்பிலும் பேசப்பட்டுவந்தது.

இம்மாநாட்டை நடத்தவேண்டும் என்று யோசிக்கப்பட்டு முடிவெடுத்ததும், அண்ணா அவர்களைச் சந்தித்து இம்மாநாட்டில் எப்படியும் கலந்துகொள்ளவேண்டும் என்று வேண்டினேன். நான் சொன்ன யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், நான் எப்படி கருஞ்சட்டை மாநாட்டிற்கு வருவேன், என்னை ஒன்றும் தொந்திரவு செய்யாதே என்றார்.

இல்லை அண்ணா சிறிதுநேரமாகிலும் கலந்து கொள்ளுங்கள்—என்றேன் நான்.

இதுபோன்ற விஷயங்களில் நான் உனக்கு யோசனை சொல்லுவதா, நீ எனக்குச் சொல்லுவதா? என்று கோபமாகச் சொன்னார் அண்ணா. அதற்கு மேல் நான் ஒன்றும் வற்புறுத்தவில்லை.

அண்ணா அவர்கள் கருப்புச் சட்டை அணியமாட்டேன் என்று சொல்வதின் கருத்தையறியாமல் கேலி பேசியவர்கள் இம்மாநாட்டுக்கும் அண்ணா வரப்போவது என்று பெரியாரிடம் மறைமுகமான வேண்டுதலும் விடப்பட்டன; இவையனைத்தையும் கழகம் பொருட்படுத்தவில்லை.

சென்னையில் கருஞ்சட்டைத் தொண்டர் மாநாடு நடந்தால் பெரிய ரகளை ஏற்படும்—மாநாட்டை நடத்த விடமாட்டோம், என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியினர் வெளிப்படையாகவே பேசிவந்தனர்.

(5-ம் பக்கம் பார்க்க)



சென்னை கருஞ்சட்டை மாநாட்டில், இடமிருந்து வலம்: என்.வி.என்., சி.டி.டி. அரசு, தி.பொ.வேதாச்சலம்; பெரியார், தங்கராசு, அண்ணா, என். ஜீவரத்தினம், சுப்பராயலு, ஏ. எஸ். இராமன். இரண்டாம் வரிசை: தூத்துக்குடி நீதிமாணிக்கம், ஈ. வெ. கி. சம்பத்.

மாலை 17 : 31-8-63 சனிக்கிழமை : விலை 16 காசு. : மலர் 3

தஞ்சை தரணியில் தென்னவர் பரணி

தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டினையொட்டி, 24-8-63 காலை 9-45 மணியளவில், தஞ்சை இரயில் நிலையத்தின் அருகிலிருந்து பல்லாயிரவர் அணி வகுத்த மாபெரும் ஊர்வலத்தின் நீளம் நான்கு மைல் தொலைவு ஆகும்.

இவ்வூர்வலத்தில், மாநாட்டுத் தலைவர் டாக்டர் சத்தியவாணி முத்து, மாநாட்டுத் திறப்பாளர் கே. எ. மதியழகன் எம்.எல்.எ., போராட்டக் குழுத் தலைவரும் கழகப் பொருளாளருமான கலைஞர் கருணாநிதி, மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவரும் அமைப்புச் செயலாளருமான என். வி. நடராசன், தொழிற்சங்கச் செயலாளர் ஏ.கோவிந்தசாமி, திருச்சி மாவட்ட செயலாளர் அன்பில் தர்மலிங்கம், தென்னாற்காடு மாவட்ட செயலாளர் இரா. சாம்பசிவம், நெல்லை மாவட்ட செயலாளர் எம். எஸ். சிவசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திண்டிவனம் தங்கவேலு, விழுப்புரம் சண்முகம், பட்டுக்கோட்டை அருணாசலம், ஆடுதுறை கோ. சி. மணி, அறந்தாங்கி துரையரசன் ஆகியோரும் கலந்து கொண்டு, கொடிகளை ஏந்தி இறுதிவரை நடந்தே சென்றனர்.

கழகத் தோழர்கள், இந்திக் கொடுமையை விளக்கப் புனைந்து வந்த வேடங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. குறிப்பாக 'இந்தி அரக்கி' வேடம் எல்லோரையும் கவர்ந்தது.

இந்தி அரக்கியைச் சுற்றிக் கழகத் தோழர்கள், ஆர்ப்பாட்ட ஒலிகளை எழுப்பிவந்தனர்.

கடலூர், கரூர், திருவரங்கம், முத்துப்பேட்டை, அறந்தாங்கி, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி போன்ற ஊர்களிலிருந்து தனி பஸ்களில் தோழர்கள் வந்திருந்தனர்; அவர்கள், தம் பஸ்களுடன் ஊர்வலத்தின் பின்னால் வந்தனர்.

தஞ்சை நகரின் வீதிகள்—மூலைக்கு மூலை-வண்ண ஓவியங்களாலும், கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; ஓவியங்கள்—கருத்து விளக்கமளிக்கும் கருவூலங்களாகத் திகழ்ந்தன.

வீதிகளின் இருமருங்கிலும் ஆயிரமாயிரம் மக்கள் காத்திருந்து ஊர்வலத்தைக் கண்ணுற்று வாழ்த்தினர்.

நண்பகலில் ஊர்வலம், தஞ்சை—சீனிவாசபுரத்திலுள்ள மாநாட்டுத் திடலை வந்தடைந்தது.

மாநாட்டுத் தலைவர் கழகக் கொடியை ஏற்றிவைத்ததும் ஊர்வல நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

ஃ

மாலை 4மணியளவில், தஞ்சை—சீனிவாசபுரம் பிரதாபசிம்ம ராசா தோட்டத்தில்—மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அரங்கில் துவங்கியது.

துவக்கத்தில், சிவகெங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இசை முரசு நாகூர் அனீபா அவர்கள் திராவிடப்பண் பாடினார்.

"நமது மொழி உரிமைகளைக் காக்கவும், இந்திஆதிக்க ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், நம்மை இரண்டாந்தரக் குடிமக்களாக்கும் சூழ்ச்சியை எதிர்த்து ஒழிக்கவும், தென்னக மக்களின் உரிமையை நிலைநாட்டவும் திராவிட முன்னேற்றக்கழகம் நேரடிப் போராட்டத்தை துவக்கி நடத்த வேண்டுமென இம்மாநாடு முடிவெடுக்கிறது"

—என்ற தீர்மானம், மாநாட்டில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆதரவுடன் நிறைவேறியது.

பல்லாயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டிற்கு, கொள்கைபரப்புச் செயலாளர் திருமதி சத்தியவாணி முத்து தலைமையேற்றார்.

ஏற்கனவே, சேலம் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 'இந்தி எதிர்ப்பு போராட்ட'த் தீர்மானத்தை திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வாசித்து முடித்ததும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தீர்மானத்தை வரவேற்றுத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

என். வி. நடராசன்

அனைவரையும் வரவேற்றும் மாநாட்டுக் குறிக்கோள் பற்றியும், மாநாட்டுச் செயலாளரும் அமைப்புச்செயலாளருமான திரு. என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில்,

'இந்தியை எதிர்த்துத் தாளமுத்து—நடராசன் போல் உறுதி படைத்த பட்டாளம் தி.மு. கழகப் பாசறையில் உருவாகியிருக்கிறது' எனக் கூறினார்.

கே. ஏ மதியழகன்

மாநாட்டைத் திறந்து வைத்த தலைமை நிலையச் செயலாளர் திரு. கே. எ. மதியழகன் எம். எல்.எ. அவர்கள் பேசுகையில்,

"பண்டித நேரு அனைத்து உலகத் தலைவராக இருக்கலாம்; இந்தியாவின் தலைமையமைச்சராக இருக்கலாம்; ஆனால் அவருக்கு இந்தி மொழியில் உள்ள 'க'-வுக்கும், 'த'-வுக்கும் வேறுபாடு தெரியாது—என்று இந்தி வெறியர் சேத் கோவிந்ததாஸ் ஒருமுறை கண்டித்திருக்கிறார்; நேருவுக்கே இந்த கதியென்றால், மற்றவர்கள் நிலை என்ன?' என்று கேட்டார்.

கலைஞர் மு. கருணாநிதி

அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எம்.எல்.எ. அவர்கள்,

"இந்தியை எதிர்த்துத் தூக்கு மேடை ஏறவும், சித்திரவதை அனுபவிக்கவும் தயாராக இருக்கும் மாவீரர்களின் உறுதியைக் காட்டுவதுதான் இன்றைய ஊர்வல மாட்சியும், இந்த மாநாட்டுக் காட்சியும் ஆகும்" என்று கூறினார்.

சத்தியவாணிமுத்து

தோழர்கள் மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். சிவசாமி, எஸ். எஸ். தென்னரசு, காஞ்சி கல்யாணசுந்தரம். இரா. சாம்பசிவம், நீலநாராயணன், ஈ. ஆர். கிருட்டினன், தோழியர் வேலம்மையார் ஆகியோர் தலைவரை வழிமொழிந்து பேசியபின், தலைமையேற்ற திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் பேசுகையில்,

"இப்போது, 'இந்தியா' என்கிற அரசியல் அமைப்பு இருந்தாலும் யாரையும் 'இந்தியன்' என்று அடையாளம் காட்ட முடியாது; அப்படி எவரும் இல்லை; இதுவரை இல்லாத புதிய 'இந்தியனை' உருவாக்குவதற்குத்தான் இந்தி வெறியர்கள் அரசியல் சட்டத்துடன் நமக்கு அறைகூவல் விடுக்கிறார்கள்" என்றார்.

பின், மாநாட்டுத் தலைவர், இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

ஏ. கோவிந்தசாமி

தீர்மானத்தை வழிமொழிந்து தொழிற்சங்கச் செயலாளர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில்,

"இங்குள்ள அகில இந்தியக் கட்சிக்காரர்கள் வடநாடு சென்றால், அவர்களும் இந்தியை எதிர்க்கும் நிலைமை உருவாகியே தீரும்" என்று குறிப்பிட்டார்.

எஸ். முத்து

பின், மதுரை மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து அவர்கள் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகையில், இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு அனைவரும் தயாராக வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

நாவலர் நெடுஞ்செழியன்

பின், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தி. மு., கழக அவைத்தலைவருமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தியாவில் வாழும் 44 கோடி மக்களும் 723 மொழிகளைப் பேசுகிறார்கள்; அந்த 723 மொழிகளில் இலக்கிய இலக்கண வளமற்ற மொழிதான் இந்தி.

ஆங்கிலம் அகற்றப்படுமானால் அந்த இடத்தில் அமரும் தகுதி 723 மொழிகளில் தமிழ் ஒன்றுக்குத்தான் உண்டு.

எந்த வகையிலாவது இந்தி ஆணவத்தை எதிர்த்துத் தமிழைக் காக்க, உயிரைக் கொடுக்கவும் தயங்கமாட்டோம்" என்று குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா

இறுதியாக, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றி தீர்மானத்தை மனதார வரவேற்றார்.

பின்னர், மாநாட்டுச் செயலாளர் மன்னை நாராயணசாமி மாநாடு சிறப்புற நடைபெறத் துணை புரிந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

இரவு, 11 மணிக்கு முரசொலி நாடக மன்றத்தினரால் 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' நாடகம் சிறப்புற நடைபெற்றது.

○

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

——(0)——

வணக்கம். ஆகஸ்டு மாதம் முடிய உள்ள பட்டியல் அனுப்பப் பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

தலையங்கம்

மலர். 17. 31—8—63 மாலை 3

அர்த்தமற்ற பதவி!

—)—●—(—

[என். வி. என்.]

காங்கிரஸ் ஆட்சியின் சீர்குலைவுக்கும், இன்றைய பதவி விலகல் குழப்பத்திற்கும் முக்கிய காரணம், ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள், எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளையும் புத்திமதிகளையும் கட்சி வெறிகொண்டு, மதிக்காது அவைகளை அறவே புறக்கணித்து வரும் ஆணவமேயாகும்.

எடுத்துக்காட்டாக இன்றைய அரசியல் அமைப்பில், கவர்னர் பதவி தேவையற்றதாக ஆகிவிட்டது என்பதற்கான நியாயங்களை திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பல ஆண்டுகளாக வேண்டுகோளாகவிடுத்தும்,இடித்துக்கூறியும் ஆளுங்கட்சியினர் நியாயத்தை உணருவதற்கு பதிலாக தி. மு. கழகத்தை வழக்கம்போல, எடுத்தேன்—கவிழ்த்தேன் என்ற போக்கில் வசைபுராணம் பாடவே முனைந்தனர்.

சட்டமன்றத்தில் கவர்னர் உரையாற்றும் ஒவ்வொரு சமயமும், சட்டமன்ற தி. மு. க. கட்சி கவர்னர் பதவியை எதிர்க்கும் வகையில் வெளிநடப்பு செய்துவருவதை நாடறியும்.

கவர்னர் பதவிக்காக அவரது பரிவாரங்களுடன் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்ச ரூபாய் செலவாகிவருகிறது. இவ்வாறு இந்தியத் துணைக்கண்டமெங்கும் செலவிடப்படும் தொகையை கணக்கிட்டால், ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் செலவாகலாம். இந்த இரண்டு கோடி ரூபாய் செலவின் வாயிலாக அதாவது கவர்னர் பதவிகளின் மூலமாக அந்தந்த மாநில அரசுகளுக்கோ அல்லது பொதுவாக நாட்டுக்கோ கடுகளவாவது பயன் உண்டா என்றால் அறவேயில்லை என்று, கவர்னர் பதவிகளை வகிப்பவர்களே மனம்விட்டுக் கூறிவருகின்றனர். இன்னும் சொல்லப் போனால் சில மாநிலங்களில் கவர்னர்களுக்கும், முதலமைச்சர்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்படத்தான் இப்போதைய கவர்னர் பதவிகள் தூண்டுகோலாயிருக்கின்றன.

இந்நிலையில், ஆண்டுதோறும் மத்திய அரசு, தனது வரவு—செலவுக்குப் பணம் போதவில்லையென்று வெளிநாடுகளில் தாராளமாக அடிக்கடி கடன் பெறுவது போதாதென்று, ஏழை—நடுத்தர மக்களின் எஞ்சியுள்ள வாழ்வையும் பறிக்கும் வகையில் வரி உயர்வு, புதிய வரிகள், விலைவாசி ஏற்றம், தங்கக் கட்டுப்பாடு உத்திரவு, கட்டாய சேமிப்புத்திட்டம், இந்தியைப் பரப்ப ஊதாரித்தனமானச் செலவு என்று பலவாறு கொடுமைகளைச் செய்துவருகிறது. மாநில அரசுகளோ தங்கள் கைங்கர்யத்தைச் செய்யாமலிருப்பது பாபம் என்று கருதிபோலும், நிலவரி, நீர்வரி ஆகியவைகளை உயர்த்தி வருகின்றன.

அண்மையில் மண்ணெண்ணெய், தீப்பெட்டி போன்ற பொருள்கள் விலைகள் மேலும் விஷம்போல ஏறும் வகையில் அரசினர் வரிகளை உயர்த்தியதை நாடு அறியும். இதன் மூலமாக அரசினருக்குக் கிடைத்த தொகை நான்கைந்து கோடிகள்தான் என்றும் கூறப்பட்டது. ஆனால் வரி உயர்வின் மூலம் ஏழை—நடுத்தர மக்கள் பட்டவேதனையோ எண்ணிலடங்காது.

எனவே, கவர்னர் பதவிகள் போன்ற அவசியமற்ற சில பதவிகளை விலக்கிவிட்டால், ஏழை—நடுத்தர மக்களை மேலும் மேலும் கசக்கிப் பிழியும் இந்தக் கொடுமைகளுக்கு இடமிருக்க முடியுமா என்பதை ஆளவந்தார்கள் இனியாகிலும் சிந்தித்து, எதிர்க்கட்சிகளின் சிறந்த யோசனைகளை குறிப்பாக தி. மு. கழகம் ஆண்டுதோறும் அறிவுறுத்திவருவதை ஏற்று அதன்மூலம் வரிமேல் வரி என்ற சுமையை ஏழைகளின்மீது சுமத்தும் கொடுமைகளை ஓரளவாவது குறையச் செய்யவேண்டும்.

இப்போதைய அரசியல் சட்டப்படி கவர்னர் பதவிகள் அவசியமற்றது என்று தி. மு. கழகம் எடுத்துரைத்தால் எரிச்சல் கொள்ளும் ஆளவந்தார்கள் மராட்டிய மாநில கவர்னரும், பண்டித நேருவின் அருமைச் சகோதரியாரும், உலகநாடுகள் சபையின் தலைவராயிருந்து பணியாற்றியவருமான திருமதி. விசயலட்சுமி பண்டிட் அவர்கள் அண்மையில் நாகபுரியில் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் இப்போதைய அரசியல் சட்டப்படி கவர்னர் பதவி என்பது அர்த்தமற்ற பதவியாக ஆகிவிட்டதென்றும், கவர்னர்களுக்கு பொறுப்பான அதிகாரங்கள் ஒன்றுமில்லையென்றும், முதலமைச்சர்களுக்கும், கவர்னர்களுக்கும் அபிப்ராயபேதமேற்படுவதுதான் இப்போதைய கவர்னர் பதவிகளால் ஏற்படும் விளைவாகயிருக்கிறதென்றும், தாம் விரைவில் இப்பதவியிலிருந்து விலகி, கல்வித்துறையில் பணியாற்றப் போவதாகவும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். இதுபோன்றே தமிழ் மாநில முன்னாள் கவர்னரான திரு. பிரகாசா அவர்களும் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.

இவர்கள் இருவரும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பது மட்டுமின்றி, பண்டித நேருவின் நம்பிக்கைக்கு உரியவர்களாவார்கள். எனவே இவர்களைப் போன்றவர்களின் புத்திமதியைக் கேட்டபிறகாவது இந்திய அரசு 'அர்த்தமற்ற பதவி' என்ற கண்டனத்திற்கு உரித்தாகியுள்ள கவர்னர் பதவிகளை ரத்து செய்துவிட்டு ஏழை—நடுத்தர மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் வரிச்சுமைகளை ஓரளவாவது குறைக்க முன்வரவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம், கவர்னர் பதவி வகிப்பவர்கள் மீது தனிப்பட்ட குரோதம் கொண்டு அப்பதவிகளை எதிர்த்துவரவில்லையென்பதையும், அதுபோன்ற பதவிகள் இன்று அவசியமற்றதாகிவிட்டதென்பதையும் ஆதலின், ஏழை மக்களின் வரிப்பணத்திலிருந்து செய்யப்படும் வீண் செலவுகளைக் குறைக்கவேண்டுமென்பதை அறிவுறுத்தவே, கவர்னர் உரையாற்றும்போதெல்லாம் தி. மு. கழகம் வெளிநடப்பு செய்து வந்திருக்கிறதென்பதையும், கழகம் எடுத்த நடவடிக்கை நியாயமானதுதான் என்பதையும் மராட்டிய கவர்னர் திருமதி விசயலட்சுமி அம்மையாரின் வெளிப்படையான பேச்சிலிருந்து ஆளும்வர்க்கத்தினரும், பொதுவாக காங்கிரஸ் கட்சியினரும் உணர்ந்து தெளிவுபெறுவார்களென்று நம்புகிறோம்.

அவ்வித தெளிவுபெறுவதிலிருந்து கவர்னர் பதவிகளை மிகவிரைவில் ரத்து செய்துவிட்டு, ஏழை—நடுத்தர மக்களை வரிச்சுமையிலிருந்து, கூடுமான அளவு விடுவிக்க இந்திய அரசினர் முன்வரவேண்டும்.

o

அடுத்த வாரம்

திராவிடன் 7—9—63 இதழில்.

* அண்ணாவுடன் நான்—என்.வி.என்.
* துள்ளி வருகுது சேவல்!—கோவை க. இரத்தினம்
* பொதுவுடமையரின் அகில உலக அரசியல் கண்ணோட்டம் விமர்சனம்:—திருவடியான்
* அண்டனி கிளியோபாட்ரா (தொடரோவியம்)—மதனகோபால்
* கலையரங்கம் (பட விமர்சனம்)—வீரன்
* திருமண நிகழ்ச்சிகள்—படங்கள்.

ஆகியவைகளுடன் 10 பக்கங்களாக வெளிவரும்.

ஏஜெண்டுகள் தேவை

'திராவிடன்' இதழுக்கு, முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள், கீழ்க்கண்ட ஊர்களுக்கு உடனே தேவை.

அரக்கோணம் (வ.ஆ.)	...	இலங்கை
குடந்தை	...	ஈரோடு
பட்டுக்கோட்டை	...	பொள்ளாச்சி
திண்டுக்கல்	...	திருப்பத்தூர்

நிர்வாகி:— திராவிடன், சென்னை-1

செப்டம்பர் 15-ல் வெளிவருகிறது!

பேனு முனை

[தி. மு. க. வார ஏடு]

ஆசிரியர் என். எஸ். இன்பன்

○

அண்ணு பிறந்த பொன்னுளில் அவனியெங்கும் பவனி வருகிறது!
திராவிடத்தின் விடுதலை நாளில் திக்கெட்டும் முழங்க வருகிறது!
பேனு முனை—பேதை மதியினருக்கோர் ஈட்டி முனை!
சூது நெஞ்சினருக்கு ஒரு சுருக்குக் கயிறு!
மொழியை விலைபேசும் மூடர்க்கொரு சாட்டை!
வீரனின் வாள்போல் உதவும்!
விடுதலை விரும்பியின் படைக் கருவி!

விவரங்கட்கு :—

ஆசிரியர்: "பேனு முனை"
13, அக்ரகாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

8-ம் பக்கத் தொடர்ச்சி

மற்று இருக்கக் கூடாது என்றுதான் பாரதியார் கூறினூர்.

இன்றைய தினம் நாட்டிலே தூய தமிழ் வழங்குகிறது என்ருல் அதற்கு பாரதியைப் போன்றவர்களும்—மறுமலர்ச்சி இயக்கத்தவரும் ஆற்றிய அயராத தொண்டுதான் காரணமாகும்.

முன்னரெல்லாம் 'விவாக சுப முகூர்த்தம்' என்றுதான் சொல்ல வேண்டும், திருமணம் என்று சொன்னுல் சொல்பவரை சந்தேகக் கண்களோடு நோக்குவார்கள். ஐயா, வணக்கம் என்ருல் கூட அச்சப்படுவார்கள்.

பாரதியாரைப் போன்ற கவிஞர்கள் துணிவோடு இக் கொடுமைகளைச் சாடினூர்கள்.

பாரதி செய்த தொண்டுகளில் தலைசிறந்தது, அது காமராசரானுலும் கல்யாணசுந்தரமானுலும் சிவஞான கிராமணியாரானுலும் ஆதித்தனூரானுலும், அறிஞர் அண்ணு, பெரியார், ஆச்சாரியார் ஆகியோரைப் பின்பற்றுபவர்களானுலும் பாரதியார் தமிழின் சிறப்பைப் பற்றி, தமிழின் தனித்தன்மை பற்றி பாடிய கருத்துக்களை முழுதும் வரவேற்பார்கள்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணேம், ஊமையராய் செவிடர்களாய் இன்று வாழ்ந்திருத்தல் நன்றே" என்று பாரதியார் பாடினூர்! தமிழகம் இன்றுள்ள நிலையில் இந்தப் பாடலை யாருக்கு நினைவூட்ட வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று உலகெங்கும் தமிழகத்தின் புகழினை எட்டச் செய்த திருக்குறளைப் போற்றினூர்.

அதற்கேற்பவே, உலக நாடுகள் சபையில் தமிழ் மொழி ஒலிக்கவேண்டும் என்று நீங்களும் நாங்களும் எண்ணுகிறோம்.

உலக நாடுகள் சபையில் பல நாட்டு மொழிகள் ஒலிப்பதைப் போல்—அருமைத் தமிழ் மொழியும் ஒலிக்கவேண்டும் என்று நாம் எண்ணுகிறோம்.

பாரதி எண்ணினூரா? நாம் சுதந்திரம் அடைவோம் — சுயராஜ்யம் அமைப்போம் - நாட்டை ஆள்வோம் — உலக நாடுகள் சபையில் நாம் அங்கம் வகிப்போம் என்றெல்லாம் பாரதி எண்ணினூரா?

அவர் விடுதலை வேண்டும் என்று கனவு கண்டார்—அந்த கனவு நனவாகியது!

அதேபோல் பாரதி கண்ட கனவின் அடிப்படையில் நாம் தமிழ்மொழியின் ஏற்றம் பற்றி—தமிழ் நாட்டின் ஏற்றம் பற்றி எடுத்துக் கூறுகிறோம். அந்தக் கருத்து நிறைவு பெற இவ்வாண்டு பாரதி மன்றம் பணியாற்றிட வேண்டும்.

அதுமட்டுமல்ல! பாரதி முழங்கினூன். "நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்-அது நமக்கேயுரிமையாம் என்பதறிந்தோம்" என்று.

இன்றைய தினம் அதைக்கூட சொல்லக்கூடாதென்று கூறுகிறூர்கள். ஒவ்வொன்றுக்கும் வேலி போடுகிறூர்கள்!

மொழி யுணர்ச்சியைக் கூட காட்டிக் கொள்ளக் கூடாது என்கிறூர்கள்.

மூன்றுண்டுகளுக்கு முன்னர், நானும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் பம்பாய்க்குச் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தோம். அப்போது எல்லா கடைவீதிகளுக்கும் சென்றோம். எல்லா கடைகளிலும் இந்தியில்தான் பெயர்ப்பலகைகள் இருந்தன; ஆங்கிலத்தில் இல்லை.

நாங்கள் கடைக்குள் சென்று ஆங்கிலத்தில் ஏதாவது கேட்டால் அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தும் இந்தியில் பதில் சொன்னூர்கள். நாங்கள் தமிழில் கேட்டாலும் இந்தியில் பதில் சொன்னூர்கள். பிறகு கடை முதலாளியிடம் சென்று "என்னய்யா இது, இந்தி தெரியாத எங்களுக்கு ஒன்று ஆங்கிலத்திலாவது பதில் சொல்லவேண்டும் —அல்லது எங்கள் மொழியிலாவது பதில் சொல்லவேண்டும் —எங்களுக்குத் தெரியாத இந்தி மொழியில் பதில் சொன்னுல் எப்படிப் புரிந்து கொள்வது" என்று கேட்டோம்.

அதற்கு அந்தக் கடைக்காரர், இனிமேல் வந்தால் இந்தி தெரிந்துகொண்டு கடைக்குள் வாருங்கள் என்று சொன்னூர்.

இது தேசபக்தி அங்கே! இதை எதிர்த்துக் கேட்டால் தேசத் துரோகம் இங்கே!

இப்படி உணர்ச்சியற்று நாம் இருப்பது?

பெயர்ப் பலகைகளிலாவது நம் நாட்டில் நாம் தமிழுக்கு முதலிடம் தரவேண்டாமா? அத்தகைய உணர்ச்சியைப் பெற வேண்டும் என்றுதான் பாரதி சொன்னூர்!

தமிழ் மொழி உலகெலாம் போற்றிப் புகழப்பட வேண்டும் என்று சொன்னூர் பாரதி! தமிழ் மற்ற மொழிகளுக்கு அடிமையாக வேண்டுமென்றோ, மற்ற மொழிகளைத் தமிழ் அடிமைப்படுத்த வேண்டுமென்றோ பாரதி சொன்னூரில்லை.

பாரதி பழமையைச் சாடியிருக்கிறூர்—அதே நேரத்தில் பழமையிலே உள்ள நல்ல தத்துவங்களை வரவேற்றிருக்கிறூர்.

காளியைப்பற்றி பாடியிருக்கிறூர், சாதிக் கொடுமைகளைச் சாடியிருக்கிறூர்.

சாதிக் கொடுமைகளை ஒழிக்கப் சில தலைவர்கள் பாடுபட்டு வருகின்றூர்கள். ஆனுல் நாட்டிலே சாதிச் சண்டைகளை வளர்க்கப் பலர் முயலுகிறூர்கள். அதிலும் தேர்தல் காலத்தில் பல புதிய சாதிகள் தோன்ற ஆரம்பித்து விடுகின்றன.

மாணவர்களாகிய நீங்கள் இங்கே உள்ளவரை தூய்மையான உள்ளத்தோடு பழகுகிறீர்கள். ஆனுல் எதிர்காலத்தில் பல சம்பவங்கள் உங்களுக்கு ஏற்படும்போது நீங்கள் சாதிப் பூசல்களை மறந்து பாரதியின் கனவை நனவாக்க வேண்டும்.

"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி" என்று பாடினூன் பாரதி. இதைப்பற்றி சில புலவர்கள், இது என்ன பாடல்; ஒரு பானையில் ஆயிரம் பொத்தல்கள் இருந்தால் தண்ணீர் சிந்தத்தானே செய்யும் என்கிறூர்கள்.

ஆனுல் அவர் சொன்னதெல்லாம், மொழியால்—கலாச்சாரத்தால்—நாகரிகத்தால்— பண்பாட்டால் மாறுபட்ட அந்நியர்கள் நமக்கு வந்து என்ன நீதி புகல்வது என்றுதான் கேட்டார்.

ஒரு சமயம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களது இல்லத்தில் பெரியார் — திரு. வி. க.— டாக்டர் வரதராசலு நாயுடு ஆகிய மூவரும் பாரதியாரைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

பெரியார் அவர்கள் பாரதியார் ஒரு நாத்திகர் என்று கூறினூர். உடனே திரு. வி. க. அவர்கள் நீ ஒரு பச்சை நாத்திகன். ஆகவேதான் பாரதியை நாத்திகன் என்கிருய் அவர் ஆத்திகன் என்றூர். டாக்டர் வரதராசலு நாயுடு அவர் அதுவும் இல்லை, இதுவும் இல்லை என்றூர்.

இப்படி பாரதியாரைப் பற்றி பெருந் தலைவர்களே அவர் எந்தக் கருத்துக்குச் சொந்தக்காரர் என்று விவாதிக்கும் நிலையிருக்கும்போது மற்றவர்கள் அவரைப் பற்றித் தெளிவோடு ஆராய்ந்தால்தான் உண்மை தெரியும். பாரதி எந்தக் கட்சிக்கும் சொந்தமுடையவர் அல்ல!

பாரதியார் சொன்னது எண்ணியது செய்தது எல்லாம், தமிழின் உயர்வைப் பற்றி, தமிழின் சிறப்பைப் பற்றி தமிழின் ஆட்சியைப் பற்றிப் பேசினூர்.

அவன் வண்டி இழுத்துப் பிழைக்கும் பாட்டாளியானுலும் சரி—பெரும் பதவியிலிருப்பவர்களானுலும் சரி எங்கும் தமிழ்—எதற்கும் தமிழ் என்ற கொள்கையுடையவராக இருக்கவேண்டும்.

பலருக்குப் பலவித அரசியல் கருத்துக்கள் இருக்கலாம். சிலர் காமராசரே ஆட்சியில் இருக்கவேண்டும் என்று எண்ணலாம். வேறு பலர் மற்ற கட்சிகள் ஆட்சிக்கு வருவதை வரவேற்கலாம். ஆனுல் யார் ஆட்சியில் இருந்தாலும்—யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழுக்கு ஆபத்து என்று வரும்போது வாளாவிருக்கக் கூடாது.

பாரதி பாடினூன்!

"வாழ்ந்தால் முப்பது கோடி
மக்களும் வாழ்வோம்
வீழ்ந்தால் முப்பது கோடி
மக்களும் வீழ்வோம்!

என்று.

எப்படி? வாழ்ந்தால் முப்பது கோடி மக்களும் வாழ்வோம்—மானத்தோடு. வீழ்ந்தால் முப்பது கோடி மக்களும் வீழ்வோம்—வீரத்தோடு போராடி என்றுதான் பாடினூன்.

அதைப்போல் தமிழகத்தைப் பொறுத்தவரையில்,

வாழ்ந்தால் மூன்றரை கோடி மக்களும் வாழ்வோம் — மானத்தோடு, வீழ்ந்தால் மூன்றரை கோடி மக்களும் வீழ்வோம் வீரத்தோடு போராடி. என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

பாரதி எந்த ஒரு தனிப்பட்ட கட்சிக்கும் சொந்தக்காரன் அல்லன். அவன் நாட்டுக்குப் பொதுச் சொத்து, தமிழ்ச் சொத்து!

தமிழ் இருக்கும்வரை பாரதியின் புகழ் இருக்கும்!

ஆகவே, பாரதி மன்றம் இவ்வாண்டு முழுமையும் தமிழின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் பணியாற்ற வேண்டுமென்ற கருத்தை எனது துவக்கவுரையாகவும் வேண்டுகோளாகவும் குறிப்பிட்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க பாரதி!
வெல்க பாரதி மன்றம்.

தஞ்சையில் பாசறைக்கூட்டம்
அறப்போர் வீரர்களின் உறுதிமொழி

—o—

24—8—63 அன்று காலை 10-மணிக்கு, மாநாட்டுப் பந்தலில், திருச்சி, தஞ்சை, தென்ஆற்காடு மாவட்டங்களின் தி. மு. கழகப் பிரதிநிதிகளைக்கொண்ட பாசறைக்கூட்டம், போராட்டக்குழுத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அமைப்புச்செயலாளர் என். வி. என். உள்பட 150 பேர் கலந்துகொண்டனர். கூட்டமுடிவில் "இந்தியை எதிர்த்து எந்தவித அடக்குமுறைகளையும் ஏற்றுக்கொள்வோம்" என்று போராட்டக்குழுத்தலைவர் கூற அனைவரும் எழுந்து நின்று அதே போல கூறி உறுதி எடுத்துக்கொண்டனர்.

அண்ணாவுடன் நான் தொடர்ச்சி……

அதற்கேற்றதைப்போல், அன்றைய போலீஸ்துறை அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில், கருஞ்சட்டை மாநாட்டுக்குத் தடைவிதிக்கப்படும் என்று எச்சரிப்பதுபோல குறிப்பிட்டார்.

பெரியார் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கும் வகையில் சர்க்கார் தடை விதித்தாலும் அல்லது காங்கிரஸ்காரரர்கள் கலகம் விளைவித்தாலும் ஆக எந்த உருட்டல் மிரட்டல்களுக்கும் அஞ்சி மாநாட்டை நிறுத்திவிடமாட்டோம்—நிச்சியம் நடந்தே தீரும் என்று கூறினார்.

ஆக, இரு சார்பிலும் இவ்வித எச்சரிக்கைகளும், அறைகூவல்களும் விடப்பட்டுவரவே பெரும் பரபரப்பை ஏற்படுத்திவந்தது.

மாநாடு நடைபெற இடையே ஓரே ஒரு நாள்தான் இருந்தது. அப்போது இன்னும் அதிர்ச்சியைத் தரக்கூடிய செய்திகள் வெளிவந்த வண்ண மிருந்தன. அகாவது மாநாட்டில் யாரும் கலந்துகொள்ளக் கூடாதபடி என்னென்ன பிரச்சாரம் செய்ய முடியுமோ அந்த அளவுக்குக் காங்கிரஸ் கட்சியினர் செய்து வந்தனர். அவர்களுக்கு அதிகார பலமும் துணை செய்தது. போதாக்குறைக்கு குண்டர்களை ஏவிவிட்டுக் கலகம் செய்யவும் திட்டமிட்டனர்.

காங்கிரஸ் தரப்பிலிருந்து இவ்வித ஏற்பாடுகளைச் செய்யச் செய்ய கருஞ்சட்டைத் தொண்டர்கள் மாநாட்டின் ஏற்பாடும் விறுவிறுப்பு அடைந்தது. நாட்டின் பல பாகங்களிலிருந்து கழகத் தோழர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள சென்னை வந்து சேர்ந்தவண்ண மிருந்தனர்.

இறுதியாக மாநாடு நடைபெறும் நாளும் வந்தது. அன்று காலை பத்திரிகைகளில் பிற்பகல் சென்னையில் நடைபெறயிருக்கும் கருஞ் சட்டை மாநாட்டை தடைப்படுத்தப் போவதுடன், அதில் கலந்துகொள்பவர்களையும் கைது செய்யப் போகிறார்கள் என்ற செய்திகள் வெளிவந்தன. இந்த நெருக்கடியான நேரத்திலாகிலும் அண்ணா அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாதாயென்று எண்ணியெண்ணி தவித்தேன். அன்றைய சென்னை மாவட்ட தி. க. தலைவர் சி.டி.டி. அரசு, அமைப்பாளர் கே. கோவிந்தசாமி ஆகிய தோழர்களுடன் கலந்து பேசினேன், எப்படியும் அண்ணா அவர்களைக் கலந்துகொள்ளச் செய்ய வேண்டுமென்று. ஆனால் அண்ணா அவர்கள் சென்னையிலில்லை, காஞ்சியில் இருந்தார். எனது எண்ணம் நிறைவேறுவதற்கு வழியில்லையே என்று தவித்தேன்.

மாநாடு நடைபெற வேண்டிய நேரமும் நெருங்கிற்று. அதே போல சர்க்காரின் கெடுபிடியும் தலைகாட்டின. திராவிட கழக நிர்வாகக் கமிட்டித் தலைவர் திருச்சி வேதாச்சலம் அவர்களும் மற்ற முக்கிய தோழர்களும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

எனக்கு அண்ணாவின் மேலேயே எண்ணம் இருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் தோழர்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டுகிறேன். அதாவது அண்ணா அவர்கள் அச்சத்தின் காரணமாகத்தான் கருப்புச் சட்டை போடவில்லை யென்று பெரியார் அவர்களிடம் வீராவேசமாகப் பேசிவந்த தோழர்களில் பலர் மாநாட்டுக்கு வரவேயில்லை. மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற செய்தி பலமாகப் பரவவே, இவர்கள் மாநாட்டுக்குப் பார்வையாளராகக் கூட வரவில்லை.

மாநாடு துவக்கமாகும் சமயம் என்னைப் போன்ற தோழர்களெல்லாம் அளவுகடந்த மகிழ்ச்சியடையும் வகையில் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தவர்கள் வாழ்த்தொலி எழுப்பும் வகையில், அறிஞர் அண்ணா அவர்கள் கருஞ்சட்டை அணிந்து மாநாட்டுக்கு வந்தார்கள். மாநாட்டு மண்டபமே அதிரும் வகையில் பெரியார் வாழ்க! அண்ணாவாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே என்ற வாழ்த்தொலிகள் கிளம்பின.

அண்ணாவைப் பெரியார் அன்புடன் வரவேற்றார். இந்த நெருக்கடியான சோதனைச் சமயத்தில் கருப்புச் சட்டை அணிந்து சர்க்காரின் சவாலை ஏற்றுக்கொள்ளும் வகையில் மாநாட்டில் கலந்து கொண்ட அண்ணாவைப் பாராட்டிப் பேசினார்.

அண்ணா அவர்களும் தாம் இதுவரை கருஞ்சட்டை அணியாத காரணத்தை விளக்கியும், ஆனால் சர்க்கார் தடை விதிப்போம் என்று மிரட்டினால் அந்த மிரட்டலுக்கு நான் அஞ்சமாட்டேன் என்பதை சர்க்காருக்கு அறிவுறுத்தவே இம்மாநாட்டில் கலந்து கொண்டேன் என்றும் உணர்ச்சி ததும்பப் பேசினார்.

அண்ணா அவர்கள் கருஞ்சட்டை அணிந்து மாநாட்டில் கலந்துகொண்டதை எண்ணியெண்ணி பெருமிதம் கொண்டேன். பெரியாருக்கும் அண்ணாவுக்குமிடையே யிருந்து வந்த அபிப்ராய பேதங்கள் இனியாகிலும் நீங்கி கழகம் பொலிவுடன் விளங்கும் என்று எண்ணி நானும் மற்ற தோழர்களும் பெருமகிழ்ச்சியடைந்தோம்.

அருமைத் தோழர்களே,

அண்ணா அவர்கள் இம்மாநாட்டுக்கு வரவேண்டும் என்று எண்ணியவுடன் சென்னைக்குப் புறப்பட்டார். ஆனால், அவரிடம் கருஞ்சட்டை இல்லை. சென்னை வந்ததும், நாவவர் நெடுஞ்செழியன் அவர்களின் கருஞ்சட்டையை அணிந்துகொண்டு சர்க்காரின் அறைகூவலை ஏற்கும் வகையில் கலந்து கொண்டார். ஆகவே கருஞ்சட்டை அணியும் முறையைப் பற்றித்தான் அண்ணா அவர்களுக்கு அபிப்ராய பேதம் இருந்து வந்ததேயன்றி, சர்க்காரின் அடக்குமுறைக்கு அஞ்சியல்ல என்பது இந்த மாநாட்டின் மூலம் பெரியார் அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரியவந்தது.

அதுமட்டுமின்றி அன்றுவரை அண்ணா அவர்கள் கருஞ்சட்டை அணிய அஞ்சுகிறார் என்று பெரியாரிடம் சொல்லித் திரிந்த "அசகாயப் பேர்வழிகள்" சர்க்கார் தடைவிதிக்கப் போகிறது என்றதும் நழுவி விட்டதிலிருந்து, இப்பிரச்சினையில் அண்ணாவின் எண்ணம் நியாயம் என்பதையும் பெரியார் அவர்கள் மனமார உணர்ந்தார்.

இம்மாநாட்டில் அண்ணா ஆற்றிய சொற்பொழிவு தமிழக அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். அரசியலார் தொடுக்கயிருந்த அடக்குமுறைதான் பின்வாங்கிற்றே யன்றி கழகமோ பெரியாரோ அறிஞர் அண்ணாவோ அல்ல யென்பதை நாடு அறிந்தது. நாடெங்குமுள்ள கழகத் தோழர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

(தொடரும்)

○

பாரதப் போர்வை

——(0)——

பதவிக்கும் பிழைப்புக்கும் பல்லை இளிப்பவர்
பாரதப் போர்வை யிலே
பதுங்கியே இருந்து ஒற்றுமை பேசிடும்
பச்சோந்தித் தனம் பாராய்
உதவாக் கரையாம் இந்தி மொழியால்
ஊரினை ஆளு தற்கு
பதவிக்கு வந்தவர் பதைப்பதை
பாசிச வெறி புரியும்.

கையைத்தூக்கிடும் பொம்மைக ளிருந்தால்
கருப்பும் வெள்ளை யென்பர்
பையை நிரப்புதல் தொழிலாய்க் கொண்டோர்
பண்புடன் நடப் பாரோ?
வையம் போற்றிடும் தமிழால் ஆண்டிட.
வகையிலை என்ப வரை
ஐயோ இதுவும் மனிதரு என்று
அதிசயித் தல்நம் கடனே!

மதத்தினைக் காட்டி ஒன்றெனக் கூறுதல்
மதியில்லார் வாத மடா!
மதமோ கிருத்துவம் நாடோ பலபல
மறுத்திட முடி யாதே?
எதையும் தாங்கும் இதயத் துடனே
எத்தரை எதிர்த்திடு வோமே!
கதையினை பேசிக் கிண்டல் செய்வோர்
காற்றினில் பறந்திடு வாரே!

களா. மாறன் பி.எஸ்.சி.

சென்ற இதழில்...

கிளியோபாட்ராவின் தோழிகளோடு எனோபார்பஸும் சேர்ந்து நிமித்திகனிடம் கையைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கிளியோபாட்ரா நுழைகிறாள். அண்டோனி ரோமின் எண்ணத்தோடு இருப்பதை எனோபார்பஸிடம் தெரிவிக்கிறாள். எனோபார்பஸ் அண்டோனியைப் பார்க்கப் புறப்படுகிறார்..

அண்டோனியும், சேதி கொண்டு வந்த ஒருவனும், அண்டோனியின் பணியாட்களும் கிளியோபாட்ராவின் அரண்மனையில் நுழைகின்றனர். கிளியோபாட்ராவும் தோழிகளும் அரண்மனையிலிருந்து செல்கின்றனர். ரோமின் நிலையைப்பற்றி தூதனிடம் பேசிக் கொண்டிருந்தபோது. அறிகிறான். அப்போது வேறொரு தூதன் வருகிறான். அண்டோணியின் மனைவி பல்வியா இறந்துவிட்டதைக் கூறுகிறான் மனம் நொந்து அவன் பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் எனோபார்பஸ் வருகிறார். அண்டோனி எனோபார்பஸிடம் ரோமுக்கு போகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லுகிறான். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அண்டோனி கேட்காமல் போகவே அண்டோனியின் எண்ணத்திற்கு செவிசாய்த்தவண்ணம் அங்கிருந்து செல்கிறார். அண்டோனியும் பின் செல்கிறான்.

காட்சி 3

[கிளியோபாட்ரா, சார்மியான், ஐராஸ், அலெக்சாஸ் நுழைகின்றனர்]

கிளியோ : எங்கே அவர்?

சார் : அவரை நான் பார்க்கவே யில்லை இதுவரை.

கிளியோ : எங்கே யிருக்கிறார், யாருடன் பேசுகிறார், என்ன செய்கிறார் என்பதை அறிந்து வா. நான் அனுப்பியதாகக் காட்டிக் கொள்ளாமல் நீ பார்ப்பதுபோல் பார்த்து வா. அவர் துயரத்தில் இருந்தால் நான் நடனமாடுவதாகக் கூறு. அவர் களிப்புடன் இருந்தால், காதலி நான் நோயுற்றதாகக் கூறு. சீக்கிரம் போய் வா.

[அலெக்சாஸ் போகிறான்.]

சார் : தலைவி! ஒன்று கூறுகிறேன். உண்மையாகவே உள்ளன்போடு அவரை நீங்கள் காதலித்தால் நீங்கள் இந்த வகையான செயல்களை செய்யாதீர்கள்.

கிளியோ : வேறு என்ன செய்வது எனக்கு வேறு ஏதும் தெரியவில்லையே?

சார் : அவர் விரும்பிய வண்ணமே அவரை விடுங்கள் எதிலும் அவரை தடுக்காதீர்கள்.

கிளியோ : முட்டாள் கூட இப்படி சொல்லமாட்டான். அப்படி செய்தால் அவரை இழக்க வேண்டும்.

சார் : ரொம்பவும் அவரை சோதிக்காதீர்கள். பொறுமை வேண்டும். சில நேரங்களில் நாம் பயப்படுவதை வெறுக்கவும் செய்கிறோம்.

[அப்பொழுது அண்டோனி வருகிறான்]

இதோ வருகிறார் அண்டோனி.

கிளியோ : நான் நோய்வாய்ப் பட்டிருக்கிறேன். மனமும் அமைதியற்றிருக்கிறது.

அண்டோ : நான் மிகவும் வருந்துகிறேன். என் விஷயம் சொல்ல ... ...

கிளியோ : (இடைமறித்து) சார்மியான், என்னைப் பிடித்துக்கொள். நான் வீழ்ந்து விடுவேன். அதிக நேரம் நிற்கமுடியாது. என் உடல் அதைத்தாங்காது.

அண்டோ : என் அருமை இராணியே...

கிளியோ : தயவு செய்து அருகில் வராதீர்கள்.

அண்டோ ; என்ன? என்ன நேர்ந்து விட்டது?

கிளியோ : எனக்குத் தெரியும். அந்த நல்லக் கண்கள் சேதியொன்று தெரிவிக்கின்றன, என்ன சொல்கிறாள் உங்கள் மனைவி? நீங்கள் போகலாம். இங்கு மேலும் தங்க அவள் அனுமதிக்கவில்லையா? என்றால்தான் நீங்கள் இங்கு தங்கினீர்கள் என்று அவள் கூறவேண்டாம். நான் யார்? நான் சொன்னால் நீங்கள் கேட்பீர்களா? நீங்கள் அவளுடையவர்தானே!

அண்டோ : கடவுள்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர் ... ...

கிளியோ : ஓ! இதுவரை எந்த இராணியும் இம்மாதிரி துரோகம் அனுபவித்ததில்லை. இருந்தும் முதல் நோக்கிலேயே நான் ராஜத்துரோகத்தைக் கண்டேன்.

அண்டோ : கிளியோபாட்ரா...

கிளியோ : நீங்கள் என்னுடையவர், உண்மையானவர் என்று ஏன் நான் நினைக்க வேண்டும். பல்வியாவுக்காகப் பொய்யான சத்தியங்கள் செய்தீர்கள். வாயால் செய்த ஆணைகளை, தானே முறியக் கூடிய ஆணைகளை நம்புவது பைத்தியக்காரத்தனம்...

அண்டோ : அருமையான அழகு இராணியே!...

கிளியோ : இல்லை. தயவுசெய்து நீங்கள் போவதற்கு ஏதும் சாக்குகள் சொல்லாதீர்கள். நீங்கள் விரும்பினால் நல்லபடியே போகலாம். தங்குவதற்கு தடையில்லை; அதைப்பற்றி பேசினால் வீண் நேரமாகும்' தங்கவும் நேரிடலாம். தடுக்கும் சக்தி எங்கள் உதட்டுக்கும், கண்களுக்கும் உண்டு; பேரின்பம் காட்டும் விற்புருவங்கள், எங்களுடைய எந்த அங்கமும் குறைந்ததல்ல அழகுக்கு. சொர்க்கம் காட்டும் மணமுண்டு. இன்னும் அவை யிருக்கின்றன. உலகத்தின் உயர்ந்த—சிறந்த வீரரே, நீங்கள் உயர்ந்த—சிறந்த பொய்யனாகிவிட்டீர்கள்.

அண்டோ : என்ன சொல்கிறாய்!

கிளியோ : என்ன சொல்கிறேன். நீங்கள் என்னை அணைத்திருக்கிறீர்கள்; அதனால் நீங்கள் எகிப்திலே அன்பான ஓர் இதயம் உண்டு என்று உணரவேண்டும்.

அண்டோ : நான் சொல்வதைக் கேள் இராணி! சூழ்நிலை சூது புரிய, நேரம் நான் அங்கிருக்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறது. 'என் முழு இதயம் இந்த முழுமதியின் முன்தான் நளினமிடும். இத்தாலியிலே உள்நாட்டுக் கலகம்; ரோமின் வாசலை நோக்கி விரைகிறான், செக்டஸ் பாம்பியாஸ்; இரண்டு உள்நாட்டுப் படைகளும் திட்டம் போட்டு கலகத்தை வளர்க்கின்றன. விரும்பத்தகாதது வளர்கிறது, அதுவே செல்வாக்கும் அடைகிறது. குற்றவாளி பாம்பே தன் தந்தையின் புகழால் பெருமையால் வளர்கிறான்; அவன் மக்களிடம் செல்வாக்கும் பெறுகிறான். இப்பொழுது நிலைமை திருப்திகரமாக இல்லை. அமைதி ஓய்வு பெற்றால் மாற்றம் காணும் அங்கே. மற்றும் முக்கியமாக, நான் போவதில் அபாயம் இல்லையென்று நீ உணர கடைசிச் சேதி—அதுதான் பல்வியா இறந்துவிட்டாள்.

கிளியோ : வயது விளையாட்டுக்குச் சுதந்திரம் அளிக்காவிட்டாலும் சிறு பிள்ளைத்தனம் அளிக்கிறது; உண்மையாகவே பல்வியா இறந்துவிட்டாளா?

அண்டனி : அவள் இறந்துவிட்டாள், இராணியே! இதேபார், உன் பொன்னான ஓய்வு நேரத்திலே படித்துப்பார் இந்தக் கடிதத்தை. அவள் இறந்தது, எங்கு, எப்பொழுது என்பதும் அறிந்துக்கொள்.

கிளியோ : ஓ! என்ன உண்மையான அன்பு! நீங்கள் கண்ணீர்விட்டு நிரப்பக் கூடிய புனிதமான கிண்ணம் எங்கே? இப்பொழுது தெரிகிறது எனக்கு பல்வியா இறந்த பிறகு என் நிலை தெரிகிறது.

அண்டோ : மேற்கொண்டு விவாதம் செய்யாதே, நான் கூறப்போகும் காரணத்தைக் கேள்; பிறகு நீ விரும்பிய வண்ணம் செய். நான் இங்கிருந்து போக வேண்டும். நேசமா—விரோதமா எது நீ விரும்புகிறாய்?

கிளியோ : சார்மியான், என்னைத் தாங்கிக் கொள்! நான் மயக்கமடைவேன் போலிருக்கிறது, திடீரென்று தோன்றிய நோய் திடீரென்று மறைந்துவிட்டது. உண்மையாகவே அண்டோனி என்னைக் காதலிக்கிறார்!

அண்டோ ; என் இதயங்கவர்ந்த இராணியே! பொறுமையாக இரு. உன் காதலனுக்கு அபகீர்த்தி உண்டாக்காதே! உன் கையில்தான் எல்லாமிருக்கிறது...

கிளியோ : என்று பல்வியா என்னிடம் சொன்னாள்! இல்லையா? மறு பக்கம் திரும்பி மனைவி மடிந்ததற்கு கண்ணீர் விட்டு அது எனக்காகத்தான் என்று சொல்லிவிட்டுப் போங்கள்; அவளை விரும்பாத மாதிரி நன்றாக நடிக்கிறீர்கள். அது அப்படியே இருக்காதா?

அண்டோ : வீணாக கோபத்தைத்தான் கிளறுகிறாய்.

கிளியோ : நன்றாக நடிக்கிறீர்கள்!

அண்டோ : உண்மையை நீ உணரமாட்டாய். என் வாள்...

கிளியோ : கேடயம் சாட்சியாக... ...இல்லையா? இன்னும் நடிக்கிறீர். சார்மியான், ரோம வீரனின் முகம் சிவப்பதைப் பார்!

அண்டோ : அப்படியானால் நான் போகிறேன்.

கிளியோ : ஒரு வார்த்தை! கண்ணியத்தின் காவலரே! ஐயா நீரும், நானும் பிரிய வேண்டும்—அதுவல்ல உண்மை! ஐயா! நாமிருவரும் காதலித்தோம்—அதுவும் உண்மையல்ல இப்போது! என்றும் என் எண்ணத்தில் அண்டோனியின் எழிலுருவம்தான் எக்காளமிடும்—எக்காளமிட்டுக்கொண்டிருக்கிறது! ஆனால் என் நினைவுதான் அவருக்கு அறவேயில்லை.

அண்டோ : வீணாக நீ மனதை அலட்டிக் கொள்கிறாய். அதனால் உண்மையை உணர மறுக்கிறாய்.

கிளியோ : இல்லை, தங்களை பிரிவதென்பது எவ்வளவு கடினம். ஐயா! என்னை மன்னித்துவிடுங்கள். தங்கள் பிரிவை என்னால் தாங்க முடியாது. ஆனால் தங்கள் வருகை அவசியம் என்று அறிவிக்கிறது ரோம் நகரம். என் பைத்தியக்காரப் பேச்சுக்கு செவிமடுக்காதீர்கள். தங்களுடன் நல்லதிர்ஷ்டமும், கடவுள் கருணையும் வரட்டும். வெற்றி தங்களை எதிர்கொண்டழைக்கட்டும். தேற்றிக் கொள்கிறேன் என் மனதை. சுற்றிச் சுழலும் உம் வாளுக்கு என்றும் வெற்றி முத்தம்தான் கிடைக்கும். பிரிவு என்

மனதைப் பேதலிக்கச் செய்துவிட்டது பேரன்பு படைத்தவரே!

அண்டோ: அப்பொழுது நான் விடை பெற்றுக் கொள்கிறேன். நமது பிரிவு தற்காலிகமாக ஏற்படத்தான் வேண்டும் போலும். என் இதயம் இங்குதான் இருக்கும், உடல் மட்டும் அங்கு செல்லும். வருகிறேன், கண்ணே!

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி 4.

[ரோம் நகரம். சீசரின் மாளிகையில் ஓர் இடம். ஆக்டேவியஸ் சீசர், லெபிடஸ் மற்றும் பணியாட்கள் வருகின்றனர்.]

சீசர்: லெபிடஸ்! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். கூட்டாளியை வெறுக்கும் குறுமதியாளன் அல்ல சீசர். உண்மையைக் கூறுகிறேன். அலெக்சாண்டிரியாவிலிருந்து சேதி வந்திருக்கிறது. அவன் குடிப்பதிலும் கும்மாளமிடுவதிலும் கன்னியரின் மின்வெட்டு வீச்சிலே இன்பம் காணுவதிலேயும் பொழுதை போக்குகிறானும். இரவெல்லாம் இன்பவல்லிகளுடன் இனிமையான கேளிக்கைகளில் காலம் கடத்துகிறானும். பேட்டிகூடக் கொடுப்பது இல்லையாம் அவன். அவன் தோழர்கள் உள்ளனர், கூட்டாளிகள் உண்டு என்பதுகூட நினைப்பதில்லையாம். எல்லா தவறும் செய்யும் மனிதன் அவன் என்பதைக் காணவேண்டும்.

லெபி: இப்படி சொல்லக்கூடாது இதற்குள். அவன் தீமைகள் அவன் செய்த நன்மைகளை மூடி மறைத்து விடுகின்றன. இரவின் கடுமையால் வானத்திலே தென்படும் சிறு புள்ளிகள்கூடப் பிரகாசமாய் தோன்றுகின்றன. அது போல்தான் அவன் செய்த குற்றங்களும் அவன் தவருலேயே அவை பெரிதாகத் தோன்றுகின்றன.

சீசர்: நீ மிகவும் இளகிய மனதுடையவன். சரி. டாலமியின் படுக்கையில் தவறி விழுந்தது தவறல்ல, இல்லையா? மகிழ்ச்சியுடன் நாட்டை கொடுத்தது தவறில்லை? அடிமையுடன் ஆனந்தமாகக் குடித்து கும்மாளமிடுவது தவறல்ல! நாடோடியாகத் திரிவது நடுப்பகலில். அது தவறல்ல! சிறுவர்களிடம் அடி வாங்கிக்கொண்டு சிரிப்பது தவறல்ல! இவையெல்லாம் அவன் செயல் அவன் செயல்தான் அண்டோனி செய்தது தவறல்ல! அவன் செய்த தவறுகள் தப்பித்துக் கொள்ள முடியாதவை. இலேசான குற்றங்களல்ல அவன் செய்தவை. இப்படியே கேளிக்கையிலும், மிதமிஞ்சிய குடியிலும், காமக் களியாட்டத்திலும் அவன் நிலைத்திருந்தால் நிச்சயம் புத்தி புகட்ட வேண்டும். தீயது செய்பவன் தீர்ப்பைக்கூட எதிர்க்கிறான். குறிப்பாக தன் பழைய செல்வாக்கை உபயோகித்து புதிய இன்பம் அடைபவன் அலட்சியம் செய்துவிடுகிறான் நீதிபதியின் தீர்ப்பைக்கூட.

[அப்பொழுது ஒரு தூதன் வருகிருன்]

லெபி: மேலும் சேதி வருகிறது.

தூதன்: தாங்கள் சொன்னபடியே செய்துள்ளோம். தலைவ! ஒவ்வொரு நிமிடம் வெளிநாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் தங்களுக்குத் தெரியப் படுத்தப்படும். பாம்பே மிக்க பலமடைந்திருக்கிருன்; ஒரு பெரும் படையும் உண்டு. சீசருக்குப் பயந்து நடுங்கியவர்களைத்தான் அவன் தேடுவதாகத் தெரிகிறது. துறைமுகம் விரும்பாத வகையில் சேதமடைந்திருக்கிறது. தவருன செய்திகள் பரவுகின்றன.

சீசர்: உம். விரும்பிய விதம் எங்கே நடக்கிறது. இந்த உடல் இங்குமங்கும் பறக்கும் கொடியைப் போன்று கால வெள்ளத்தில் இங்குமங்கும் அடித்துச் செல்லப்பட்டு அழுகி விடுகிறதல்லவா?

தூதன்: தலைவா! மற்றெரு சேதி! பெயர் பெற்ற கடற் கொள்ளைக்காரர்களான மெனிக்கிரேடஸ், மினஸ் கடலை தங்கள் இல்லமாக்கிக் கொண்டார்களாம். கொள்ளையடிப்பதும், கொலை செய்வதும் அவர்கள் பொழுதுபோக்காம். கடலோரமான இடங்களில் அவர்கள் பெயரைக் கேட்டாலே திடுக்கிடுகின்றனர். அவர்கள் அட்டகாசத்திற்கு அளவேயில்லை. அவர்களுடன் சண்டையிட இளைஞர்கள் துடித்தாலும், பாம்பேயின் பெயர் அவர்களை அச்சத்தில் ஆழ்த்துகிறது.

சீசர்: அண்டோனி! உன் காமக் களியாட்டங்களை, கேளிக்கைகளை விட்டு விடு! மோடனுவில் தோற்ருலும் இர்டியசையும், பான்சோவையும் கொன்ற வீரனே! நாட்டிலே வந்த பஞ்சம்கூட உனக்கு அஞ்சி தஞ்சமடைந்ததே! இழிவான செய்கைகளுக்கு எப்படி இடம் கொடுத்தாய்! மிருகங்கள் செய்யத் துணியாததை எப்படி செய்தாய்! பலர் பார்த்ததும் வெறுப்படையச் செய்யும் உடலை விரும்புகிருய்! அது உனக்கு இழிதான் தரும். வீரனுகப் பிறந்த நீ ஏன் வீணுக கெட்டலைகிருய்?

லெபி: வருந்தவேண்டிய நிலைதான்.

சீசர்: ஒருவேளை மனசாட்சி அவன் நல்ல உணர்ச்சிகளை விழிப்படையச் செய்து ரோமுக்கு விரட்டினுல் நல்லது. வீணுக காலத்தைப் போக்காமல் களத்திலே குதித்து நாடு காக்க வேண்டும். மன்றத்தைக் கூட்டவேண்டும். நாம் வீணுக்கும் ஒவ்வொரு வினுடியும் பாம்பேவுக்கு வெற்றி தரும் காலத் துளிகள்.

லெபி: நண்ப! நாளை நான், நீ நாடும் உதவியை எம்முறையில் என்னுல் அளிக்க இயலும் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன். கடற்படை, காலாட்படை இவ்விரண்டு வகையிலும் நான் செய்யக்கூடிய உதவியை உனக்கு அறிவிக்கிறேன் நாளை. இப்போதைய நிலை உணர்ந்துதான்—நன்கு சிந்தித்துத்தான் எது ஒன்றும் கூறமுடியும். அவசரத்தில் அறிவிழந்து—அமைதியற்று செய்வது அழகாகாது.

சீசர்: அது முடியும்வரை என்னுடைய வேலை கூட அதுதான். அதுவரை அமைதியாக, ஓய்வாக யிருக்க முடியுமா? சென்றுவா நண்பா! வணக்கம்.

லெபி: வணக்கம்! தலைவனே! சென்று வருகிறேன். அதுவரை தாங்கள் அறியும் எதுவும் எனக்குச் சொல்லியனுப்பவும். இருவரும் அதன் பலனை பகிர்ந்துக் கொள்ளலாம். சேதியனுப்புங்கள். வருகிறேன்.

சீசர்: சந்தேகம் வேண்டாம் ஐயா! அது என்னுடைய கடமைகளில் ஒன்றல்லவா!

[போகின்றனர்]

(தொடரும்)

தமிழில்: **இரா. மதனகோபால்** பி.காம்., டி.இ.பி.	மூலம்: **சேக்ஸ்பியர்**



பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581

பாரதி கண்ட கனவு?

சென்னை கிறித்துவக் கல்லூரி பாரதி மன்றத் துவக்க விழா, 22—8—63 அன்று நடைபெற்றது. துவக்க விழாவிற்கு வரலாற்றுப் பேராசிரியர் சற்குருதாஸ் தலைமை வகித்தார். ஆசிரியர் என்.வி.என். அவர்கள் விழாவைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினார். மாணவர் தலைவர் ரகீம் (எம்.ஏ) அனைவரையும் வரவேற்றார். மாணவர் செயலாளர் சீனிவாசன் (பி.ஏ.) நன்றி நவின்றார்.

ஆசிரியர் என். வி. என். அவர்களின் பேச்சு இங்கே தரப்படுகிறது!

●

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! பேராசிரியர்களே! மாணவத் தோழர்களே!

ஓயாமல் அரசியல் மேடைகளில் பேசி வருகின்ற என்னை— அதிலும் ஆளுங் கட்சியினரை எதிர்த்துப் பேசி வருகின்ற என்னை, இப்பேர்ப்பட்ட மன்றங்களில் அழைத்து எனது கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பளித்திருப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியளிக்கிறது.

வரலாற்றுப் பேராசிரியருடையவும், உங்களுடையவும் அன்புக் கட்டளைக்கிணங்கி இவ்வாண்டு பாரதி மன்றத்தினை நான் துவக்கி வைக்கிறேன்.

பாரதியார் அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு மறக்க முடியாதது - அழிக்க முடியாதது.

இந்த என் கருத்தை மாற்றுக் கட்சியினரும் ஒப்புக் கொள்வார்கள். இங்கே என்னை வரவேற்றுப் பேசிய மாணவர் தலைவர், பாரதியின் ஆவியையும் வரவேற்பதாகக் குறிப்பிட்டார். பாரதியின் ஆவி இருக்கிறதோ இல்லையோ, ஆனால், பாரதி நாட்டில் ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கும் உணர்ச்சி-சக்தி-இன்னமும் பிரதிபலித்துக் கொண்டுதானிருக்கிறது.

பாரதி தேசிய பாடல்களைப் பாடினார்—குயில் பாட்டு பாடினார்—பெண்ணின் பெருமையைப் பாடினார். அவர் எந்தப் பாடலைப் பாடினாலும் இறுதியில் தேசீய உணர்ச்சி கொந்தளிக்கும் அளவுக்குக் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்.

நம் நாடும் — மக்களும்—தலை நிமிர்ந்து வாழ—அவர் பாடிய பாடல்களில் தன்மான உணர்ச்சியைப் போதித்தார். ஆகவேதான் எந்தக் கட்சியினரும் அவரைக் கொண்டாடுகின்ற புரட்சிக் கவியாகத் திகழ்கிறார்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே — இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று அவர் பாடிய பாடலைப் படிக்கும் போது, உள்ளம் உருகும்— உணர்ச்சி கொந்தளிக்கும். அந்த செந்தமிழ் நாடும் செந்தமிழ் மொழியும் இன்று எந்த நிலையில் உள்ளது என்பதை நான் சுட்டிக் காட்டினால் அது வேறு திசைக்குச் செல்லுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

தமிழ் நாட்டு மக்களும்—தமிழ் மொழியும் சிறப்புக்குரிய பழம் பெரும் நாட்களிலே வீற்றிருந்த நிலையையும், இன்றைய நிலையையும் எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

தமிழ் மன்னன் ஒருவனிடம் புலவர் சென்று அவனைப் போற்றிப் பாடி தமிழ்க் களஞ்சியத்தை அந்த அரசவையில் மணக்கச் செய்தாராம். இதைக் கண்டு மகிழ்ந்த மன்னன் அவருக்குப் பரிசில் கொடுக்க எண்ணி, பொன்னையும் பொருளையும் அள்ளிப் புலவர் கையில் கொடுக்க வந்தானாம். அப்படி கொடுக்க வந்தபோது மன்னன் கை மேலாகவும், புலவர் கை கீழாகவும் இருக்கக் கண்ட புலவர், மன்னனை நோக்கி, "மன்னா! நீ புவியாள்பவனாகயிருக்கலாம், ஆனால் நான் அதனினும் சிறந்த தமிழையாள்பவன். ஆகவே உன் கை மேலும் என் கை கீழும் இருக்கக் கூடாது. நீ பரிசுப் பொருளை கைகளில் ஏந்தியவாறு இரு— நான் இரு கைகளாலும் அவற்றை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி மன்னன் கைகளின் மேல் தன் கைகளை வைத்துப் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டாராம் புலவர்!

இப்படி தமிழனின் தன்மானத்தை விளக்க பண்டைய நிகழ்ச்சியொன்று நமது புலவர் பெருமக்களால் சொல்லப் படுகிறது.

தமிழறிந்த காரணத்தால் புலவர்—தமிழை ஆதரிக்கும் தமிழ் மன்னனின் கரம்கூட தன் கரங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று கருதிய புலவரின் தன்மானம் எங்கே? இன்றையத் தினம் பெயர்ப்பலகைகளிலிருந்து அரசுக்கட்டில் வரை அன்னைத் தமிழ்மொழிக்கு மேலாக எந்த மொழி வந்து அமர்ந்தாலும் அதைக் கண்டு வாளாவிருக்கும் இன்றையத் தமிழினம் எங்கே?

இப்படித் தமிழர்கள் தன்மான

(4-ம் பக்கம் பார்க்க)

திருமண அழைப்பு

[தி. மு. க. கிளைக்கழகங்களுக்கும் சார்பு மன்றங்களுக்கும்]

அன்புடைவீர்! வணக்கம். நிகழும் (1-9-63) ஞாயிறு காலை 9 மணியளவில் காஞ்சிபுரம் தோழர் அ. க. தங்கவேலர் அவர்களின் கருத்தரங்கச் சோலையில்

எனது முதல் மகன்
செல்வன் **பரிமளத்திற்கும்**
மாயவரம் திரு, சௌரிராசனார் திருமகள்
செல்வி **சரோசாவிற்கும்**
என் இளைய மகன்
செல்வன் **இளங்கோவிற்கும்**
பேரளம் திரு. குஞ்சிதபாதனார் திருமகள்
செல்வி **விசயலட்சுமிக்கும்**

திருமணவிழா பேளுக்குறிச்சி தோழர் ஜி. பி. **சோமசுந்தரம்** அவர்கள் தலைமையில் நடைபெறும். விழாவிற்கு தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து சிறப்பித்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்,
அண்ணாதுரை

தங்கள் வருகையை ஆவலோடு வரவேற்கும்:-

இரா. நெடுஞ்செழியன் எம்.எல்.ஏ., தி.மு.க: அவைத்தலைவர்
மு. கருணாநிதி எம்.எல்.ஏ. பொருளாளர்
கே.ஏ. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை நிலையச் செயலாளர்
என். வி. நடராசன் அமைப்புச் செயலாளர்
சி. பி. சிற்றரசு வெளியீட்டுச் செயலாளர்
சத்தியவாணிமுத்து கொள்கைபரப்புச் செயலாளர்
ஏ. கோவிந்தசாமி தொழிசங்கச் செயலாளர்

நிகழ்ச்சி நிரல்

——(0)——

ஆகஸ்டு 31 :

இரவு 7 மணிக்கு பெண் அழைப்பு ஊர்வலம்
காருகுறிச்சி அருணாசலம் அவர்களின் நாதசுர இன்னிசை
நாச்சியார்கோயில் **ராகவப்பிள்ளை** }
வலங்கைமான் **சண்முகசுந்தரம்** } தவுல்

செப்டம்பர் 1 :

காலை 9 மணி **பரிமளம்—சரோஜா** திருமணம்
காலை 9-30 மணி **இளங்கோவன்-விசயலட்சுமி** திருமணம்
காலை 10 மணி முதல் 12 மணி வரை வாழ்த்துரை
பகல் 12 மணி மணவிழா விருந்து
மாலை 4 மணி முதல் 6 மணி வரை
காருகுறிச்சி அருணாசலம் நாதசுர இன்னிசை விருந்து
மாலை 6 மணி முதல் 9 மணி வரை
குமாரி எல். விசயலட்சுமி நடனம்
இரவு 9-30 மணி இசைச்சித்தர் **சிதம்பரம் செயராமன்** இன்னிசை விருந்து

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1.